செ.வெ.எண்: 40 நாள்: 22.09.2020

# கரூர் மாவட்டம்
# பத்திரிக்கை செய்தி

**2020 – 2021 ஆம் நிதியாண்டிற்கான தாட்கோ திட்டங்களில் பயன்பெற விருப்பமுள்ள ஆதிதிராவிடர் /பழங்குடியினரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

தாட்கோ மகளிர் நிலம் வாங்கும் திட்டம், நிலம் மேம்பாடு திட்டம், துரித மின் இணைப்பு திட்டம், கிணறு அமைத்தல் திட்டம், பெட்ரோல் டீசல், சமையல் எரிவாயு சில்லரை விற்பனை நிலையம் அமைத்தல், தொழில் முனைவோர் திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ், மானியத்துடன் கூடிய கடன் பெற 18 வயது முதல் 65 வயது வரையுள்ள ஆதிதிராவிடர்/பழங்குடியினர் இனத்ததைச் சார்ந்த நபர்கள் விண்ணப்பிக்கலாம். இதற்கான வருமான வரம்பு ஆண்டுக்கு ரூ.1.00 இலட்சத்திற்குள் இருக்கவேண்டும். இதே போல், இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்பு சிறப்பு திட்டம், அதில் மருத்துவமையம், மருந்தியல், கண்கண்ணாடியகம், மூடநீக்கம் மையம், இரத்த பரிசோதனை நிலையம் மற்றும் அதனை மேம்படுத்துதல் ஆகிய திட்டங்களுக்கு வயது வரம்பு 18 வயது முதல் 45 வயதும், வருமான உச்சவரம்பு ஆண்டுக்கு ரூ.3.00 இலட்சத்திற்குள் இருப்பவர்கள் விண்ணப்பிக்கலாம். மேலும், ஆதிதிராவிடர் / பழங்குடியின மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான பொருளாதார கடன்களுக்கு 50% மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கப்படும்.

இவை தவிர, மாவட்ட ஆட்சியரின் விருப்புரிமை நிதி, தாட்கோ மேலாண்மை இயக்குநரின் விருப்புரிமை நிதி, தாட்கோ தலைவர் அவர்களின் விருப்புரிமை நிதி, இந்திய குடிமைப்பணி முதன்மைத்தேர்வு எழுதுவோருக்கு நிதியுதவி,சட்ட பட்டதாரிகளுக்கு தொழில் துவங்க நிதியுதவி, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தொகுதி – I முதல் நிலை தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு நிதியுதவி மற்றும் பட்டயக்கணக்கர்/ செலவுக்கணக்கர் நிறுவன செயலர் கல்வி பயில்வோருக்கான நிதியுதவி ஆகிய திட்டங்களில் பயன்பெற தகுதிவாய்ந்த ஆதிதிராவிடர் / பழங்குடியினரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

மேற்படி, திட்டங்களின்கீழ் பயன்பெற தாட்கோ இணையதள முகவரி http://application.tahdco.com மூலமாக விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பத்தினை படியிறக்கம் செய்தோ/ நகலினையோ, கைப்பிரதி விண்ணப்பங்களையோ சமர்ப்பிக்க வேண்டியதில்லை. விண்ணப்பிக்கும்போது, விண்ணப்பதாரர் பற்றிய முழு விவரங்கள், புகைப்படம், சாதிச்சான்று, வருமானச்சான்றிதழ், குடும்ப அட்டை, ஆதார் அட்டை, விலைப்புள்ளி, விண்ணப்பதாரரின் தொலைபேசி/கைபேசி மின்னஞ்சல் முகவரி, திட்ட அறிக்கை ஆகியவற்றினை ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். இணையதளத்தில் 24 மணி நேரமும் பதிவு செய்யலாம் என்ற தகவலை கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**